முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு தி.மு.க. இளைஞரணி நடத்திய 'என் உயிரினும் மேலான' மாநிலம் தழுவிய 17000 பேர் பங்கேற்ற மாபெரும் பேச்சுப் போட்டியில், சென்னையில் நடைபெற்ற இறுதி போட்டியில் பங்கேற்று கழகப் பேச்சாளர்களாக அங்கீகரிக்கப்பட்ட 182 பேச்சாளர்களில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சார்ந்த பார்வைத்திறன் குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளி மாணவி சஸ்ரினா ஃபிர்தவுஸ், விராலிமலை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சொ.தமிழினியன் ஆகியோருக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தலா ரூபாய் 25,000 (இருபத்தைந்தாயிரத்தை) தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் உடன் இருந்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் தெட்சிணாபுரம் ஊராட்சி பகுதியில் பணியில் ஈடுபட்டு இருந்த தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களிடம் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யாநாதன் கலந்துரையாடி குறைகளைக் கேட்டறிந்தார்.

தமிழக முதல்வர் முன்னெடுத்து செல்லும் கொள்கைகளை

தமிழக மக்கள் மத்தியில் இருந்து யாரும் பிரித்து விட முடியாது!

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி !

புதுக்கோட்டை, அக். 29-

நடிகர் விஜய் நடத்தியது மாநாடு என்பதைவிட பிரமாண்டமான சினிமா சூட்டிங் என்றே சொல்லலாம் தேர்தலில் வெற்றி பெற்று அவர்கள் ஆட்சிக்கு வரட்டும் அதன் பின்பு கூட்டணியில் பங்கு கொடுப்பது பற்றி பார்க்கலாம்,

அ.தி.மு.க. என்ற கட்சி தமிழ்நாட்டில் எடுபடாது என்பது தெரிந்து தான் அவர்களைப் பற்றி பேச வில்லை அ.தி.மு.க. தொண்டர்களை தன் பக்கம் இருப்பதற்காகத்தான் விஜய் குறித்து எதுவும் பேச வில்லை.

ஊழலைப் பற்றி பேச வேண்டுமெனில் 2011 .21 வரையிலான ஆட்சியில் நடந்த ஊழலை பற்றி தான் பேச வேண்டும் 2021 26 இல் எந்த ஒரு ஊழலும் நடைபெறவில்லை யாராலும் பேச முடியாது நாங்கள் எந்த ஒரு ஊழலிலும் ஈடுபடவில்லை. தி.மு.க.வை தாக்கி பேசினால் தான் மக்கள் மத்தியில் ஏதாவது சென்று பேச முடியும் அதனால் பேசுகின்றனர். தி.மு.க. இளைஞரணி

மாநாட்டுக்கு வந்தவர்கள் முழுக்க முழுக்க இளைஞர்கள் தான்.

1500 மீட்டர் 1000 அடி நீளம் என்ற அளவில் தி.மு.க. இளைஞரணி மாநாட்டிற்கு பந்தல் அமைத்திருந்தோம் விஜய்யின் மாநாட்டு கூட்டத்தை விட மூன்று மடங்கு கூட்டத்தை நாங்கள் கூட்டி இருந்தோம். இளைஞர்கள் நம்பி வரும் இயக்கமாக தி.மு.க. தான் உள்ளது. தியேட்டரில் முதல் ஷோ ஓட்டுவது போல் கூட்டத்தை காட்டுவதற்காக இந்த மாநாட்டு சோவை நடத்தியுள்ளனர்.

திராவிடம் என்பது தமிழ் மண்ணில் இருந்து அகற்ற முடியாத ஒரு சொல் அந்த சொல் முதலில் வரும் போது அதன் பின்பு எந்த சொல் வந்தாலும் பிரச்சினை இல்லை நாங்களும் தமிழ் நாடு தான் சொல்கிறோம் திராவிடம் இல்லாமல் தமிழ்நாடு இல்லை சிறுபான்மையின் நலனுக்கு இந்தியாவிலேயே பல்வேறு வகையில் அதிகமாக பாடுபட்ட பாதுகாக்கும் இயக்கம் தி.மு.க. தான். அதனால் என்னென்ன பாதிப்புகளை சந்தித்துள்ளோம் என்பது நாடறியும் ஒரு முறைக்கு இருமுறை கொள்கைக்காக ஆட்சி இழந்த கட்சி தி.மு.க. இவ்வாறு பேட்டியளித்தார்.

சோ.துரைபாண்டியன் தலைமை! ஆர்.குமரேசன் முன்னிலை!

கோவை- கவுண்டம்பாளையம் 35வது வார்டில் தூய்மை பணியாளர்களுக்கு நல உதவிகள்!

மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் ஏற்பாட்டில் வழங்கல்!

கோவை, அக். 29 -

கோவை வடக்கு மாவட்டத்தில் கவுண்டம்பாளையம் பகுதியில் 35 வது வார்டில் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுடைய ஆலோசனையின் பேரிலும் மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவி ஒத்துழைப்புடனும், இங்கே பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் சுமார் நூறு பேருக்கு மேல் உள்ள ஆண் பெண் பாலாருக்கு, வேஷ்டி சட்டை, சேலைகள் எனவும், தீபாவளி செலவுக்கான பணம் முடிப்பும், 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

35 வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரைப்பாண்டியன் தலைமையில், வட்டக் கழக செயலாளர் ஆர்.குமரேசன் முன்னிலையில், சிறப்பு விருந்தினராக முன்னாள் கவுண்டம்பாளையம் பகுதி செயலாளர் மதியழகன் மற்றும் மூத்த முன்னோடி பால சுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்ட, இந்நிகழ்வில் மாநகராட்சியின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ள இந்த நல உதவிகள் வழங்கும் நிகழ்வானது சிறப்புற அமையப்பெற்றது.

தொடர்ந்து எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி, தன் னலம் இன்றி, பொதுமக்களின் நலன் கருதி அதிகாலையில் இருந்தே செயல்படும் தூய்மை பணியாளர்கள், மற்றும் அவர்களுடன் இணைந்து பணியாற்றும் மேற்பார்வையாளர், காண்ட்ராக்டர் ஆகியோருக்கு உரிய மரியாதையும் தீபாவளியை கொண்டாட, அவர்களுக்கான செலவினங்களை தன் பொறுப்பில் ஏற்று செய்த, மாமன்ற உறுப்பினர் சம்பத்தை பொதுமக்கள், பெரிதும் போற்றி மகிழ்ந்தனர்.

சொற்போர் வீரர்களை

வாழ்த்தி வரவேற்கிறேன்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, அக்.29-

"கருத்தியல் சொற்போர் வீரர்களை வாழ்த்தி வரவேற்கிறேன்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (27.10.2024) கழகத்தலைவரும்முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"களப்போரில் துணைநிற்கவுள்ள கருத்தியல் சொற்போர் வீரர்களை வாழ்த்தி வரவேற்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூகவலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.